செ.வெ.எண்: 04 நாள்: 01.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் 20-10-1991 ஆம் ஆண்டு இரவுக் காவலராக திரு.கு.வைத்திலிங்கம் அவர்கள் பணியில் சேர்ந்தார். அதன் பிறகு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து பதவி உயர்வின் மூலம் இளநிலை உதவியாளராக பணிபுரிந்தார். இந்நிலையில் வயது முதிர்வின் காரணமாக 31.01.2017 அன்று பணி ஓய்வு பெற்றார். இதனை தொடர்ந்து தனது பணிக்காலத்தில் சிறப்பாக பணிபுரிந்து இளநிலை உதவியாளராக பணி ஓய்வு பெற்ற திரு.கு.வைத்திலிங்கம் அவர்களை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து பொன்னாடை போர்த்தி பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண்ஜெகத்பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.க.பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**